பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16. 03. 2024 **SATURDAY** **7.15 AM**

<u>ஆகாஷ்வாணி</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடுகிறது.

2. அரசியலில் கருப்புப்பணம் செல்வாக்கு செலுத்துவதை கட்டுப்படுத்தவே தேர்தல் பத்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3. குடியுரிமை திருத்தச்சட்டம் மக்கள் நலனை கருத்தில்கொண்டுதான் கொண்டுவரப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

4. தில்லி மதுபானக்கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில், தெலங்கானா முன்னாள் முதலமைச்சர் திரு சந்திரசேகர ராவின் மகள் கவிதாவை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது.

5. ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

---- *<u>இனி விரிவான செய்திகள்</u>* ---

**<<<<<>>>>>**

மக்களவைத் தேர்தலுக்கான அட்டவணையை தேர்தல் ஆணையம் இன்று வெளியிடுகிறது.

புதுதில்லியில் பிற்பகல் நடைபெறவுள்ள செய்தியாளர் சந்திப்பில், தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் தேர்தல் அட்டவணையை வெளியிடுகிறார்.

மக்களவைத் தேர்தலோடு சேர்த்து, ஆந்திரா, ஒடிஷா, அருணாச்சலப்பிரதேசம், சிக்கிம் மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அறிவிப்பும் இன்று வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2019-ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் ஏழு கட்டங்களாக நடைபெற்றது.

இந்த ஆண்டும் மக்களவைத் தேர்தல் பல கட்டங்களாக நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**<<<<<>>>>>**

அரசியலில் கருப்புப்பணம் செல்வாக்கு செலுத்துவதை கட்டுப்படுத்தவே தேர்தல் பத்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தில்லியில் ஊடக நிறுவனம் ஒன்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பேசிய அவர், தேர்தல் பத்திரங்கள் குறித்த உச்சநீதிமன்ற தீர்ப்பை தாம் முழுவதும் மதிப்பதாக கூறினார்.

தேர்தல் பத்திர முறையை முற்றிலுமாக ரத்து செய்வதற்கு பதில், அந்த முறையை மேலும் மேம்படுத்தியிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

வெளியிடப்பட்டுள்ள 20 ஆயிரம் கோடி ரூபாய் தேர்தல் பத்திரங்களில், 303 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்ட பிஜேபி-க்கு ஆறாயிரம் கோடி ரூபாய் மட்டுமே கிடைத்துள்ளதாகவும், ஆனால் 242 உறுப்பினர்களை கொண்ட இதரக்கட்சிகள் 14 ஆயிரம் கோடி ரூபாயை பெற்றுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

**<<<<<>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தெலங்கானா மாநிலத்தில் நடைபெறும் தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

இதற்காக நேற்றிரவு ஹைதராபாத் வந்தடைந்த அவர், ஆளுநர் மாளிகையில் தங்கி ஓய்வெடுத்தார்.

முன்னதாக நேற்று, மால்காஜ் கிரி மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் பிஜேபி வேட்பாளரை ஆதரித்து நடைபெற்ற வாகனப்பேரணியில் பிரதமர் கலந்துகொண்டார்.

சுமார் ஐந்து கிலோமீட்டர் தூரம் வரை நடைபெற்ற இந்த பேரணியில் ஏராளமான பிஜேபி தொண்டர்களும் கலந்துகொண்டனர்.

<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலம் சந்தேஷ்காலியில் பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட 11 பெண்கள் நேற்று குடியரசுத் தலைவர் மாளிகையில், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்தித்து பேசினர்.

அம்மாநிலத்தில் ஷெல்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினர் சமூகத்தை பாதுகாக்க உடனடியாக தலையிட வேண்டும் என்று அவரிடம் வலியுறுத்தினர்.

இதுதொடர்பாக, மனு ஒன்றையும் குடியரசுத் தலைவரிடம், அப்பெண்கள் அளித்ததாக ஷெல்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினர் ஆதரவு மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் டாக்டர் பார்த்தா பிஸ்வாஸ் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

குடியுரிமை திருத்தச்சட்டம் மக்கள் நலனை கருத்தில்கொண்டுதான் கொண்டுவரப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

ஜார்கண்டில் மக்களவைத் தேர்தல் தொடர்பாக பிஜேபி மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி மிகப்பெரிய அளவில் வெற்றிபெறும் என்றும் திரு ராஜ்நாத் சிங் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<>>>>>

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கோவையில் மேற்கொள்ளவுள்ள வாகன பேரணிக்கு அனுமதி வழங்கி சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, பிஜேபி சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அவசர வழக்கை விசாரித்த நீதிபதி திரு ஆனந்த் வெங்கடேஷ் இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

பிரதமரின் நிகழ்ச்சிக்கு காவல்துறை உரிய அனுமதியை வழங்க வேண்டும் என்றும், பொதுமக்களின் நடமாட்டம் மற்றும் வாகன போக்குவரத்தை உறுதி செய்வதற்கு மாற்று வழிகளை காவல்துறையினர்

கண்டறிய வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிஜேபி சார்பில் வரும் திங்கட்கிழமை கவுண்டம்பாளையம் தொடங்கி, தலைமை அஞ்சல் நிலைய சந்திப்பு வரை திறந்த காரில் செல்வதற்கு பாதுகாப்பு காரணங்களை கூறி கோவை காவல்துறை அனுமதி மறுத்ததை எதிர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

<<<<<>>>>>

நடப்பு நிதியாண்டில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட காப்புரிமைகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இதற்கான விண்ணப்பங்களில் 52 சதவீதம் இந்தியர்கள் என்று குறிப்பிட்டார்.

அரசு மின்னணு சந்தை மூலம், நடப்பு நிதியாண்டில் 3 லட்சத்து 82 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நடப்பு நிதியாண்டிற்குள் 4 லட்சம் கோடி ரூபாய் என்ற இலக்கு எட்டப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<>>>>>

பீகாரில் திரு நிதிஷ்குமார் தலைமையிலான அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பிஜேபி சட்டப்பேரவை உறுப்பினர்கள் 12 பேரும், ஐக்கிய ஜனதாதள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் 9 பேரும் புதிய அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர்.

பீகார் ஆளுநர் திரு ராஜேந்திர விஷ்வநாத் **'Arlekar** புதிய அமைச்சர்களுக்கு பதவி பிரமாணம் செய்துவைத்தார்.

<<<<<>>>>>

தெலங்கானா முன்னாள் முதலமைச்சர் திரு சந்திரசேகர ராவின் மகள் கவிதாவை அமலாக்கத்துறை கைது செய்துள்ளது.

தில்லி மதுபானக்கொள்கை முறைகேடு தொடர்பான வழக்கில், இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அமலாக்கத்துறை தெரிவித்துள்ளது.

முன்னதாக, ஹைதராபாதில் கவிதா இல்லத்தில் அமலாக்கத்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

இந்த கைது நடவடிக்கை சட்டவிரோதமானது என்று பி ஆர் எஸ் கட்சி கூறியுள்ளது.

<<<<<>>>>>

மீனவர் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்காக இந்தியா - இலங்கை இடையே அமைக்கப்பட்ட கூட்டு நடவடிக்கைக்குழு கூட்டத்திற்கு விரைவில் அழைப்பு விடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

மீனவர்களை கைது செய்யும் நடவடிக்கைகள் அடிக்கடி நிகழ்வதால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு ஸ்டாலின் அக்கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

தமிழகம் விரைவில் குடிசை இல்லாத மாநிலமாக மாற்றப்படும் என்று சட்ட அமைச்சர் திரு ரகுபதி தெரிவித்துள்ளார்.

நாகை மாவட்டம் ஒரத்தூரில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆயிரத்து 801 பயனாளிகளுக்கு சுமார் ஐந்து கோடி ரூபாய் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கி, அவர் பேசினார்.

குடிசை வீடுகளில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் விலையில்லா பட்டாக்கள் வழங்கி வீடுகள் கட்டித்தரப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மாநிலத்தில் அனைத்து வளர்ச்சித் திட்டப்பணிகளையும் தொடர்ந்து கண்காணித்து செயல்படுத்திட முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம், மக்களைத்தேடி மருத்துவம், மகளிருக்கான இலவச பேருந்து உள்ளிட்ட திட்டங்கள் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளதாகவும் திரு ரகுபதி தெரிவித்தார்.

<<<<<>>>>>

சிமி என்று அழைக்கப்படும் இந்திய இஸ்லாமிய மாணவர் இயக்கம் மீதான தடை கடந்த ஜனவரி மாதம் 29-ஆம் தேதிமுதல் நீட்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத செயல்கள் தடுப்புச்சட்டத்தின்கீழ், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதையொட்டி, தமிழக அரசும், சிமி இயக்கத்தை தடை செய்து அரசாணை வெளியிட்டுள்ளது.

<<<<<>>>>>

அமெரிக்காவில் ஏற்பட்ட புயலில் சிக்கி மூன்று பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமடைந்தனர்.

அந்நாட்டின் மத்திய பகுதியில் உள்ள பல மாகாணங்களில் புயல் காரணமாக, வீடுகளும், வர்த்தக நிறுவனங்களின் கட்டிடங்களும் பலத்த சேதமடைந்தன.

கென்டக்கி, இண்டியானா, ஆகர்ன்சாஸ், ஆகிய மாகாணங்களிலும் புயல் காரணமாக பலத்த சேதங்கள் ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன.

இன்றும் பல்வேறு இடங்களில் புயல் காரணமாக மோசமான வானிலை நிலவும் என்று அமெரிக்க தேசிய வானிலை நிலையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆல் இங்கிலாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் லக்ஷயா சென் முன்னேறியுள்ளார்.

பெர்மிங்காமில் நேற்று நடைபெற்ற காலிறுதியில் லக்ஷயா சென், 20-22, 21-16, 21-19 என்ற செட் கணக்கில், மலேசியாவை சேர்ந்தவரும், உலகத்தரவரிசையில் 10-ஆவது இடத்தில் உள்ளவருமான **Lee Zii Jia** –வை வென்றார்.

முதல் செட்டை இழந்தபோதும், சுதாகரித்து விளையாடி அடுத்தடுத்த இரண்டு செட்டுகளை லக்ஷயா சென் கைப்பற்றினார்.

இன்று மாலை இந்திய நேரடிப்படி 3.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதியில் லக்ஷயா சென், உலகத்தரவரிசையில் 9-ஆவது இடத்தில் உள்ள இந்தோனேஷியாவை சேர்ந்த **Jonatan Christie** –ஐ எதிர்கொள்கிறார்.

<<<<<>>>>>

மகளிர் பிரிமீயர் லீக் கிரிக்கெட் எலிமினேட்டர் சுற்று போட்டியில் பெங்களூரு அணி ஐந்து ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

தில்லியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில், 6 விக்கெட் இழப்பிற்கு 135 ரன் எடுத்தது.

136 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய மும்பை அணி, 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 130 ரன் மட்டுமே எடுத்தது.

தில்லியில் நாளை நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் பெங்களூரு அணி - தில்லி அணியை எதிர்கொள்கிறது.

<<<<<>>>>>

காஞ்சிபுரம் மாவட்டம் இருங்காட்டுக்கோட்டையில் சென்னை மோட்டார் கிளப் சார்பில், 47-ஆவது தென்னிந்திய கார் பந்தயப்போட்டி நேற்று தொடங்கியது.

மூன்று நாட்கள் நடைபெறும் இப்போட்டிகளை மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு சண்முகம் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

<<<<<END>>>>>